முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த

மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 12 திகதி முதல்

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 19 திகதி வரை

(28.08.2022 ஞாயிறு முதல் 04.09.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. சத்திய ஞான வாழ்வுதனை உலகினில்
   சற்குருவாய் சகலருக்கும் அருளவந்த
   உத்தம ஞானியே ஆறுமுக அரங்கனே
   உமை வாழ்த்தி அகத்திய மகரிஷி யானும்
2. யானுமே இந்தியா தமிழகத்தில்
   இனிதே சுபகிருது யாளி திங்கள்
   ஞானம்பட வியதிகதிமேல் மூவாறோர் திகதி வரை
   நடக்கும் நிகழ்வாக வருங்கால பலன் குறித்த ஆசி
3. ஆசிதனை அரங்கன் கேட்க உரைப்பேன்
   ஆற்றல்மிக்க ஆளுமையாகிட
   வாசிவென்ற ஞானிகள் தன்னை
   வல்லமைபட வணங்கி வர வேண்டும்
4. வேண்டியே இறைபற்றுக் கூடவே
   வினை வெல்லும் ஜீவத் தயவு
   உண்டாகி மக்களை பேணுகின்ற
   உயர் ஞானம் பிறக்கும்
5. பிறக்கவே ஆளுமைகள் தானும்
   பேதம் மதம் சாதி இனம் என்று
   பிறக்கா சமத்துவ நிலை கூடி
   பொறுப்பாக மக்களை தேற்றும்
6. தேற்றும் பாதுகாக்கும் வண்ணம்
   தெரிவிப்பேன் தமிழக இந்தியத்தலைமை
   ஆற்றல்பட மாற்றம் கண்டிடும்
   அவசியமான திட்டநலம் கையாண்டு
7. கையாண்டு அனாவசிய பகட்டான திட்டங்களை
   கைவிட்டு மக்கள் நலம் பேணும்
   தயவான ஆட்சி முறையாக மாறும்
   தனக்கான அடையாளம் தருகின்ற
8. தருகின்ற செயல் முறைகளை மாற்றி
   தமிழகம் இந்தியாவை காக்கும்
   பெருமை மிக்க வளர்ச்சிக்கான
   பொருளாதார பின்னடைவை போக்கும்வண்ணம்

9. வண்ணமுடன் திட்டமுறை செலவை
வரையறை செய்து செயல்படுத்த
எந்நாளும் நிலைக்கும் அரசாக
எந்நாடும் வியக்கும் ஆளுமையாக
10. ஆகவே அற்புதம் கூடிநிற்கும்
ஆற்றல் கூட்டா எதிர்வினையாக
வகைபடா மக்களை வதைக்கும்
வரிச்சுமை புதிய புதிய வழிகண்டு
11. கண்டுமே தாக்கம் தொடர்ந்தால்
கட்டாயம் பின்னடைவு கண்டு
உண்டான மக்களின் செல்வாக்கை
உலகினில் இழந்து வாட நேரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 12ம் நாள் 28.08.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் 19ம் நாள் 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

உண்மை ஞான வாழ்வாகிய சத்திய ஞான வாழ்க்கையை உலக மக்கள் அனைவருக்கும் அருளி உலகிற்கு ஞானம் அருளும் உத்தம ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகரே உம்மை வாழ்த்தி அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் ஆவணிமாதம் 12ம் நாள் 28.08.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் 19ம் நாள் 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசிநூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஆட்சியானது வல்லமை மிக்க ஆளுமையாக ஆகிட வேண்டுமாயின் வாசியை வென்ற முற்றுபெற்ற ஞானிகளை வணங்கிவர வேண்டும் கடவுள் பக்தியுடன் முன்செய்த பாவங்களை பாவ வினைகளை வெல்லும் ஜீவ தயவும் இருக்க வேண்டுமப்பா. மக்களிடத்து ஆளுபவர்க்கு ஜீவதயவு உண்டாகி மக்களை காப்பாற்றும் உயர் ஞானமும் பிறந்திடுமப்பா. ஞானிகள் ஆசியுடன் சிறப்பறிவு பெற்று சாதிமத இன பேதம் பார்க்காமல் சமத்துவம் பெருகி மக்கள் பெரும் முன்னேற்றம் அடைவார்கள். மக்களைப் பாதுகாக்கும் விதமாக இந்தியா தமிழக ஆட்சி ஆற்றலுடன் மாற்றம் காண்கும். அனாவசியமான பகட்டான திட்டங்களை குறைத்து கைவிட்டு மக்களுக்கு அவசியமான நலத்திட்டங்களை செயல்படுத்தி தயவுமிக்க ஆட்சியாக ஒரு நல்ல முன்னுதாரன ஆளுமையாக நல்ல பல செயல்பாடுகளை கொண்ட ஆட்சியாக இந்தியா தமிழகம் மாறி காப்பான அரசாக மாறும்.

நாடு வளர்ச்சி அடைவதை தடுக்கும் பெரும் பிரச்சனையான பொருளாதார பற்றாக்குறையை பொருளாதார பின்னடைவை போக்கும் விதமாக திட்டங்களுக்கு உண்டான திட்டமுறை செலவுகளை குறைத்து செயல் படுத்தினால் எந்நாளும் நிலைத்து நிற்கும் அரசாக மாறும் உலகின் எல்லா நாடுகளும் வியந்து போற்றும் ஆட்சியாக அற்புதம் காண்கும்.

எதிர்வினையாக செயல்பட்டால் மக்களை வதைக்கும் விதமாக புதிய புதிய முறைகளில் மக்களின் மீது வரி விதித்தால் நாடு பொருளாதார பின்னடைவை சந்தித்து ஆட்சியர்கள் பின்னடைவை சந்தித்து மக்களிடத்து உள்ள செல்வாக்கை இழப்பார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–